

தஞ்சை மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் அறிமுக விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்ற நூலினை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோ.வி.லெனின், கழக இளம் பேச்சாளர் இரா.பிரித்தி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்



கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் வெண்ணமலை அன்புகரங்கள் இல்லத்தில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழிகாட்டுதலின் பேரில் காலை உணவு வழங்கப்பட்டது.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# 4 வழித்தடங்களுக்கான 6 புதிய நகரப் பேருந்துகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், நவ.28-

பெரம்பலூர் மாவட்டத்தில்போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 4 வழித்தடங்களுக்கான 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர் மாவட்டம்,வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட குன்னம் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 4 வழித்தடங்களுக்கு 6 புதிய BS VI ரக மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்று ந.மிருணாளினி தலைமையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து வாலிகண்டபுரம், தொழுதூர் வழியாக லெப்பைக்குடிக்காடு வரையில் இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சித்தளி, பேரளி வழியாக குரும்பாபாளையம் வரை ஒரு பேருந்தும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து செங்குணம் வழியாக பென்னகரம் வரை இரண்டு பேருந்துகளும், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து சிறுவாச்சூர், இலுப்பைக்குடி வழியாக சில்லக்குடி வரை ஒரு பேருந்தும் என மொத்தம் 6 புதிய BS VI ரக நகரப் பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்,மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி. ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குனர் க. தசரதன் ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.இராஜேந்திரன், திருச்சி மண்டல பொது மேலாளர் டி.சதீஷ்குமார் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் ரூ.66.14 லட்சம் மதிப்பில்

# 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பால் குளிரூட்டும் மையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

பெரம்பலூர்,நவ.28-

பெரம்பலூர் மாவட்டம்,குன்னத்தில்

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ரூ.66.14 லட்சம் மதிப்பிலான புதிய பால் குளிரூட்டும் மையத்தை இன்று திறந்து வைத்தார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் குன்னம் சட்டமன்ற தொகுதி மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். அனைத்து வருவாய் கிராமங்களிலும் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்த தமிழகத்தின் முதன்மை மாவட்டம் என்ற பெருமையினை பெரம்பலூர் பெற்றிடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நல்லாட்சியில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் பால் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டமானது தூய பால் உற்பத்தியில் தொடர்ந்து மாநில அளவில் முதல் மூன்று இடங்களில் இருந்து வரும் மாவட்டமாகும். நான்கு வட்டங்களை மட்டும் கொண்ட நம் மாவட்டம் நாளொன்றுக்கு 2.20 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யும் தமிழகத்தின் முன்னோடி மாவட்டம் என்ற பெருமை கொண்டது.

பால் கூட்டுறவு சங்கங்களின் நாளொன்றுக்கு சராசரியாக 1100லிட்டருக்கு மேல் கொள்முதல் செய்யும் தமிழகத்தின் முன்னணி மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம் ஆகும். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பால் சேகரிப்பு கொள்முதல் நிலையங்களில் பாடாலூர் பால் பண்ணையில் நாளொன்றுக்கு 1.00 லட்சம் கொள்ளளவும், பெரம்பலூர் குளிர்வூட்டு நிலையத்தில் நாளொன்றுக்கு 1.00 லட்சம் கொள்ளளவும், 20 தொகுப்பு பால் குளிர்விப்பு நிலையங்களில் நாளொன்றுக்கு 1.27 லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 193 பால் சேகரிப்பு சங்கங்களில், 18,566 நபர்கள் பால் உற்பத்தியாளர்களாக உள்ளார்கள். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 2,20,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

குன்னம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் லிட்., ஆனது 01.12.1964 அன்று பதிவு செய்யப்பட்டு 11.12.1964 அன்று 50 உறுப்பினர்களுடன் 45 லிட்டர் பாலுடன் துவக்கப்பட்ட சங்கமாகும். தற்போது 5,151 உறுப்பினர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

குன்னம், வரகூர், அசூர், ஆய்க்குடி, ஒதியம், அந்தூர், கரம்பியம், ஆதனூர் பெரியம்மாபாளையம், மூங்கில்பாடி, சின்னவெண்மணி, பெரியவெண்மணி, கொத்தவால், அழகிரிபாளையம், கல்லம்புதூர் என 11 வருவாய் கிராமங்கள் 22 கறவை மையங்களை உள்ளடக்கியதாக குன்னம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் உள்ளது. இச்சங்கத்தில் தற்சமயம் நாள் ஒன்றுக்கு 14,400 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்நிலையில் இன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் தலா 5,000 கொள்ளளவு கொண்ட 3 தொகுப்பு பால் குளிர்விப்பு மையம் இன்று திறந்து வைக்கப்பட்டது. ரூ.51 லட்சம் மதிப்பில் குளிர்விப்பு கருவிகளும், ரூ.15 லட்சம் மதிப்பில் அதற்கான கட்டடமும் என மொத்தம் ரூ.66.14 லட்சம் மதிப்பில் இந்த பால் குளிரூட்டும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

பால் உடனடி குளிர்விப்பு மூலம் தரமான பால் பாதுகாப்பு, பாலின் காப்பு தன்மை அதிகரிப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கு பாலுக்குரிய விலையை உறுதி செய்தல், நவீன கருவிகளுடன் பால் பரிசோதனை வசதி, கிராமப்புற பால் உற்பத்தியாளர்களுக்கும் வேகமான சேவை மற்றும் வெளிப்படைத்தன்மை என பல்வேறு நன்மைகள் உள்ளது. பால் உற்பத்தியாளர்கள் இனி பெரம்பலூரில் உள்ள குளிரூட்டும் மையத்திற்கு செல்லாமல் குன்னத்திலேயே வழங்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் ஏற்பாட்டில், கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு பிரியாணி ஆகியவற்றை வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமேகநாதன் மாவட்ட கழக பொருளாளர் மு. லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து திருமருகல்.வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பி.என்.கார்த்தி, நாகை நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர். எஸ். சத்யன் மற்றும் பலர் உள்ளனர்



கோவை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம், துடியலூர் எஸ்.எஸ்.கமலேஷ் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை ஆற்றினார். இதில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் சு.ராதாகிருஷ்ணன், மூலனூர் எஸ்.கார்த்தி, மு.ஜெயக்குமார் உள்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்டம் பொன்னகர் பகுதி தி.மு.க. சார்பில் பிராட்டியூரில் உள்ள சரணாலயம் முதியோர் இல்லத்தில் காலை உணவு பகுதி செயலாளர் மோகன் தாஸ் தலைமையில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர்கள் கவுன்சிலர் ராமதாஸ், பி.ஆர். பால சுப்பிரமணியன், மூவேந்திரன், தனசேகர், அந்தோணிசாமி, பவுன்ராஜ்,, பீமநகர் சதீஷ் குமார், சர்ச்சில், கவிதா மாணிக்கம், , கருத்து கதிரேசன், இளைஞரணி சார்லி, தினேஷ் குமார், ஐ.டி. விங் பிரஷாந்த், மணிவண்ணன், பிராட்டியூர் மணிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பொன்னகர் பகுதியில் பெரிய மிளகு பாறை, ஒத்தக்கடை, பொன்னகர் ஆகிய இடங்களில் தி.மு.க. கொடியேற்றி இனிப்பு வழங்கினர்.




கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் பகுதி கழக பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தலைமையில், துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் மகேந்திரன், வாசிம் ராஜா முபாரக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் பகுதி கழக பொறுப்பாளர்கள் எஸ்.எம்.சாமி, டெம்போ சிவா, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், பசுபதி, இலா.தேவசீலன், என்.ஜெ.முருகேசன், ஆ.கண்ணன், வ.ம.சண்முகசுந்தரம், பாபு (எ) வீ.அ.பாலசுப்பிரமணியம், கே.எம்.ரவி, சேதுராமன் எ.எம்.கிருஷ்ணராஜ், இ.ராமச்சந்திரன், கே.பாக்கியராஜ், சிங்கை மு.சிவா, ப.அன்பழகன், ஷேக் அப்துல்லா, ப.கஸ்தூரி அருண், எ.எஸ்.நடராஜ், ப.மோகன்ராஜ், மா.நாகராஜ், இரா.சேரலாதன், குட்டி(எ) ஜெயச்சந்திரன், அஞ்சுகம் பழனியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், 2025ஆம் ஆண்டிற்கான 21 வயதிற்குட்பட்ட ஆண்கள் 14 வது உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிகள் 2025 தமிழ்நாட்டில் நடைபெற உள்ளதை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டம், காளப்பட்டி SUGUNA PIP FIH ஹாக்கி ஆண்கள் ஜூனியர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 லெட்ஸ் ஹாக்கி டிராபி டூர் மூலம் வரப்பட்ட கோப்பையினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் அறிமுகம் செய்தனர். இதில் மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், உதவி ஆட்சியர் பயிற்சி மரு.பிரசாந்த், சுகுணா கல்விக் குழுமங்கள் தலைவர், கோவை மாவட்ட ஹாக்கி சங்கத் தலைவர் லக்ஷ்மி நாராயணசாமி, மண்டல விளையாட்டு இணை இயக்குனர் அருணா, மாவட்ட விளையாட்டு அலுவலர் புவனேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.